சீக்கிரம் வந்து விட்டீர்கள்! அது, சரியில்ல; அதனால், வடக்கிலிருந்து இறங்கி தண்ணீரின் எதிர்புறமாக சென்று, தென் புறம் கரையேறி மேலே வந்து விடுங்கள்! என்றான்.

வெ.சாமி. 'சரி, நல்லது!' என்று, மாயவனை நினைத்து பெரியண்ண சாமி தண்ணீரில் இறங்கி எதிர்ப்புறமாக போகும் போது; ஆசாரி வெள்ளாங்குளத்து ஏரியின் மேல் இருந்து, கல்லுப்பிள்ளையாரை பார்த்து, இந்தப் பிள்ளையாரைத் தூக்கி, பெரியண்ண சாமி கரையேறி மேலே வரும் போது, தலையில் போட்டுக் கொன்று விடுவோம் என்று நினைத்து, ஆசாரி பிள்ளையாரிடம் சென்று, மண்டியிட்டு உட்கார்ந்து, 'அப்பா, பிள்ளையாரே!'

பாட்டு

"உனக்கு உடைக்கும் சிறு தேங்காய்
பிள்ளையாரே ஒன்று லட்சம் ஆயிரமாம்
படைக்கும் சிறு தேங்காய் பிள்ளையாரே
உனக்கு பத்து லட்சம் ஆயிரமாம்."

பிள்ளையாரே! நீ, என் தோளுக்கு வந்தால், உனக்கு உடைக்கும் இரு தேங்காய் ஒரு லட்டும் வாங்கித்தாரேன்! என்றதும், அந்த கெட்டு கெட்ட பிள்ளையார், ஆசாரி சொன்னதைக்கேட்டு அவன் தோளில் எட்டிக் குதித்து நின்றது. ஆசாரி பிள்ளையாரை தோளில் வைத்து பெரியண்ண சாமியின் தலையில் போடுவதற்கு, தெற்கு போகும் போது,

அரண்மனையில் பார்வதிக்கு,
ஆடிவரும் அன்ன ஊஞ்சல், அசைந்து வரும் பொன் ஆச்சம், பாடிவரும் பொன் ஆச்சம், பறந்து வரும் பொன்பதுமை, பார்வதியா திருவிளக்கு தூரியில் படுத்து நித்திரை செய்யும் போது.

நாடுவரும் போது நல்ல கனவு கண்டு சொன்னாள், இப்போது அண்ணருக்கு கேடு வரும் போது பத்தினி கெட்ட கனவு கண்டாள். பருவதியா, திருவிளக்கு தூரியிலிருந்து துள்ளி எழுந்து, 'அடி குப்பி! சீக்கிரம், சின்னண்ண சாமியை கூப்பிடு' என்றாள். குப்பி உடனே பகடை விளையாடும் இடத்திற்கு சென்று, சின்னண்ண சாமியிடம்-

சின். 'ராஜாவே! பார்வதியா, எழுந்தோ, தூங்கினா சீக்கிரம் கூப்பிடுங்கள்' என்றாள்.

சின்னண்ண சாமி 'ஆகா!' என்று, கோபத்துடன் எழுந்திருக்கும் போது, உடலெங்கும், படீரென்று கத்தரித்து விட்டது.

பாட்டு,,

"எட்டியே என்றுத்தா தாண்டுறாரோ
இளைய இளைய குமாரசங்கர்
தாண்டித் தாண்டிக் குதிக்குறாரோ 23/
சிமார்த்துள்ள என் சாமி சங்கருதான்"

23 சின்னண்ண சாமி ஓடிவந்து, பார்வதியாளிடம் 'ஏன் தங்கமே! அழைத்தாய்? எதற்கு, அழுகிறாய்?' என்றார்.

பார்வதி. 'அண்ணே! சதிகார ஆசாரி ஒருவன், அண்ணனை சதி செய்து, வெள்ளாங்குளத்து ஏரிக்கு கூட்டிப்போய், அண்ணனை! உ. அடித்து தண்ணீரில் ஏரியில் கீழே இறக்கி விட்டான், சண்டாளன்! சீக்கிரம் போங்கள், அண்ணே!' என்றாள்.

சி. சாமி. 'ஏன், தங்கமே! ஆசாரி, எங்கு வந்தான்? அவன் பேச்சைக் கேட்டு. அண்ணன்

எதற்கு, அங்கே போறீர்? என்று,
ஐயாவை, பலமுள்ள பாரமுள்ள சிங்கருக்கு,
கண்கள் சிவந்து, காந்தாளமாகி, பொன்
னுருக்கி மாளிகைக்கு ஓடி கத்தியை
எடுத்து இடையில் சொருகிக் கொண்
டு, வேகமாக புறப்பட்டார்.

பாட்டு

"முன்னாகு என்சாமி பின்னாகு
புலி பாய்ச்சல் என்சாமி பாயுறாரே
முன்கரணம் என்சாமி பின்கரணம்
முப்பத்திரண்டு நல்லே செல்க்கரணம்"

சின்னண்ண சாமி வெள்ளாங்குளத்து ஏரிக்கு
போகும் போது, ஆசாரி பிள்ளையாரை தோளில்
எடுத்துக் கொண்டு, தெற்கு போய்க் கொண்
டிருந்தான். சாமி, கத்தியை எடுத்து-

பாட்டு

"கத்தியை என்சாமி சுழட்டுறாரு
கார் மின்னல் என்சாமி மின்னுதுபார்
எட்டி எட்டி சுழட்டுறாரு
ஏது மின்னல் என்சாமி மின்னுதுபார்
ஆசாரியை என்னைத்தா நாலு வெட்டு
பிள்ளையாரை என்சாமி மூணு வெட்டு"

சின்னண்ண சாமி, ஆசாரியையும், பிள்ளையாரை
யும் துண்டு, துண்டாக வெட்டி எறியும் போது,

அரண்மனையிலிருந்து, சாம்புகன் வந்து சேர்ந்தான். சின்னண்ணா சாமியைக்கண்டு, நமஸ்காரம் செய்து/ராஜாவே! கோபத்துடன் வந்தீர்களே, என்ன, சமாச்சாரம்? என்றான்.

சி.சாமி: அடே, சாம்புகா! நேற்று இரவு இந்த ஆசாரி வந்து, அண்ணனை தந்திரமாக சதி செய்து இங்கு கூட்டிவந்து, தண்ணீரில் இறங்கி சத்தியம் செய்யச் சொல்லியிருக்கிறான்; 12, அடி தண்ணீரில் உயிர் பிழைக்க முடியுமா? மாயவர் வந்து காப்பாற்றியிருக்கிறார்! என்டா, சாம்புகா! ஆசாரி, காலையில் சத்தியம் செய்யக் கூப்பிட்டானே, அண்ணன் என்னிடம் வந்து சொல்லியிருந்தால் என்ன! சாம்புகா! அண்ணனுக்கு கொஞ்சங்கூட புத்தியில்லை, மாயவர் இல்லாவிட்டால், இந்நேரம் தண்ணீரில் இறந்து போயிருப்பார்; பிறகு இந்த ஆசாரி இந்த சேனிப்பிள்ளையானை தூக்கி, அண்ணன் தலையில் போட்டு கொல்ல நினைத்தான்; இதை, பார்வதியா கண்டு என்னிடம் சொல்லி, நான் வந்து ஆசாரியை வெட்டியெறிந்தேன்; நான் வராவிட்டால்

இந்நேரம் அண்ணனைக் கொன்றிருப்பான்,
சக்கார, ஆசாரி! ஏண்டா, சாம்புகா!
இப்படியும், நம் அண்ணன் இருக்கிறானே!
என்று, சின்னண்ணசாமியும், சாம்புகனும்
பேசிக்கொண்டிருக்கும் போது,

வீரப்பூரிலிருந்து, வேட்டுவர் மக்கிரியை
தலையில் வைத்துக் கொண்டு வந்தார்கள்.

சி.சாமி. 'அடே, சாம்புகா! யாரடா, அது! கூடைகளை 23
தலையில் வைத்துக் கொண்டு, வருவது?'

233 சாம்புகன். 'ராஜாவே! வீரப்பூரிலிருந்து, வேட்டுவர்
கள் வருகிறார்கள்.'

சி.சாமி. 'சாம்புகா! ஓடி, வெட்டடா வெளியடா! எல்
லோரையும் என்றதும். சாம்புகன் கத்
தியை எடுத்து, கையில் பிடித்து-

பாட்டு.

"ஓடியோடி வெட்டுறானே இனி வெட்டுறானே
பொல்லாத சாம்புகனும் இனி சாம்புகனும்
காலொடிந்து போனவனும் இனிபோனவனும்
வேடுவரை கண்டதுண்டம் செய்யுறானே
பொல்லாத சாம்புகனும்."

---

சாம்புகன், ஆயிரம் வேட்டுவரையும், அடித்து
துரத்தி விட்டு, சின்னண்ணசாமியிடம் வந்து,
நின்றான். பிறகு, இருவரும் பெரியண்ண
சாமியையும் கட்டிக் கொண்டு

அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அரண்மனைக்கு வந்ததும், பார்வதியாள் ஓடி வந்து, பெரியண்ண சாமியை கட்டிப்பிடித்துக் கொண்டு' அண்ணா! ஆசாரி பேச்சைக் கேட்டு, வெள்ளாங்குளத் தேரிக்கு சென்று, ஆசாரி கொல்ல நினைத்தானே, அண்டாளன்! சின்ன, அண்ணன், வராமலிருந்தால்! இந்நேரம் உங்கள் கதி என்ன ஆவது? என்று, அழுதாள். சின்னண்ண சாமி, பார்வதியாளை சாந்துப் படுத்தி, பிறகு எல்லோரும் சாப்பிடச் சென்றார்கள். சாப்பிட்டு, சாமி இருவரும் தாம்பூலம் போட்டு, சந்தோஷமாக இருந்தார்கள்.

பாட்டு

"தெங்கோடு பொன்னய்யா அதிகாரம்
இனி அதிகாரம்.
செலுத்திப்பட்டம் அண்ணருகள்
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்.
தங்க விரால் பொன்னய்யா
அதிகாரம் இனி அதிகாரம்.
தனிச் சுப்பட்டம் நாட்டிலே
ஆளுகிறார் அங்கு ஆளுகிறார்!"

மாதமூன்று மழை பெய்யும், பொன்னிவள நாட்டில்
வருஷமொரு கல்மாரி.
கட்டுக்களங்காணும், கருதுளிர்க்க நெல்காணும்.

பொன்னிவள நாட்டில், அண்ணமார்கள் இருவரு
ம், நீதி தவறாமல் ஆண்டு வரும் போது,
சாமி இருவருக்கும், வயது பதினாறு, வாலிபம்
தொண்ணூறு, சரியாக முதிர்ந்து கொண்டி
ருக்கும் போது.

முன்பு, தாமரை வரத்துக்கு காசி போகும்
போது, வழியில் படுத்திருந்த பன்றியை,
தன் காலால் எட்டி உதைத்தால் அல்லவா,
அந்தப்பன்றி இப்போது, வீரப்பூரில் கரு
காளியம்மன் கோவிலில் தவமிருந்து,
ஏழு குட்டிகளுக்கு வரம் வாங்கி; ஆறு
குட்டிக்கு இளைய ஏழாவது குட்டி,
அறுபது அடி உயரம், எழுபது அடி
நீளமுள்ள கொம்பனாக வளர்ந்திருந்தது.

சாஸ்த்திர முள்ள கொம்பன், வீரமுள்ள கொம்பன்,
நட்சத்திர முள்ள கொம்பன், வேப்பிலைக்கொம்பன்,
வெங்கமீஞ்சிப்பன்றி. பூ,வால். பூங்குட்டி,
பொன்னல் அங்காரம், தொப்புளில்
துளசிமாலை, நாவில் நட்சத்திரம் உள்ள

கொம்பன். கருமலை போல் வளர்ந்து, இப்போது
பன்றிக்கும், வயது பதினாறு, வாலிபம் தோண
றாறு சரியாக முடிந்து, கொண்டிருந்தது.
அந்தக் கொம்பனை, வீரப்பூர் வீரதங்கா
பத்தினி வளர்த்துக் கொண்டிருந்தாள்.
இப்படியிருக்கும் போது, அன்று கொம்பன்
என்ற பன்றி, படுத்துக் கொண்டு நினைத்தது.

கொம்பன். நம்மளுக்கும், வயது பதினாறு முடிந்து
கொண்டிருக்கிறது, இனி, நாம் போய்
காராளன் சீமையை, கண்ணில் பார்க்
க வேண்டும்! வீரதங்கா, பத்தினி சாப்பாடு,
இனி நமக்கு வேண்டாமென்று, பன்றி
நினைத்து, ஊருக்கு மேற்கு போய்,
கிணறு மாதிரி பெரிய குழி தோண்டி
உள்ளே போய் படுத்துக் கொண்டது.
வீரதங்கா பத்தினி அரண்மனையில், மாதர்.
கள் பத்தினியிடம் சென்று, 'அம்மணி!
இன்று, மூன்று நேரமும், பன்றி கொம்பன்
சாதம் சாப்பிட வரவில்லை; எந்த நேர
மும், கருகாளியம்மன் கோவிலில் படுத்
திருக்கும்; இன்று, கொம்பனை அங்கு

காணவில்லை! என்றார்கள்.

வீரதுங்: அய்யய்யோ! எங்கு சென்றுவிட்டது? மாதர்களே! கொம்பனை, ஏதாவது சனியைப் பிடித்தீர்களோ? என்னமோ?

மாதர்: ஆத்தா! நாங்கள், ஒன்றும் சொல்லவில்லை!

வீரதுங்: சரி, வாருங்கள்! போய் பார்க்கலாமென்று, எல்லோரும் கருகாளியம்மன் கோவில் வந்து, அடி மாதர்களே! கோவிலின் பின்புறம் சென்று பார்த்து வாருங்கள்! என்றாள், வீரதுங்கா பத்தினி. மாதர்கள் சென்று, சுற்றியும் பார்த்து வந்து! ஆத்தா! பன்றியை, எங்கும் காணவில்லை! என்றார்கள்.

பாட்டு

வீரதுங்: "பன்றியைத்தான் பத்தினி காணமென்று
பதறுனாளே அன்னக்கொடி வீரதுங்கா
என்னை நிலவோ தனியே விட்டு கொம்பா
எங்கு போயி மறைந்தாயப்பா.
நீ போன நில்லை தடமறியேன்
போயிருக்கும் கொம்பா தாவறியேன்"

வீரதுங்கா பத்தினி, பன்றியைக் காணவில்லை என்று, அழுது கொண்டே மாதர்களைக் கூட்டிக் கொண்டு, கொம்பனைத் தேடிக் கொண்டு ஊருக்கு மேற்கில் போகும் போது, அங்கே ஒரு புதர் இருந்தது, அதன் நடுவில்

ஒருகிணறு போல், குழி, இருப்பதைக் கண்டு,
பன்றி இங்கே தான் இருக்குமா என்று
வீரதுங்கா பத்தினி அருகில் போய், நின்று-

பாட்டு

வீரதுங். "கொம்பா நீ தூங்கும் இடமறியேன்
சஞ்சரிக்கும் தாவரமேயேன்."

அப்போது குழிக்குள்ளிருந்து கொம்பன்,
வீரதுங்கா பத்தினி அழுகும் சத்தம்
கேட்டு, 'நம்மைக் காணாமல் வீரதுங்கா,
பத்தினி தேடிக் கொண்டு வந்திருக்கிறாள்'
என்று, கொம்பன், பெருமூச்சு விட்டது.
அந்த மூச்சு வந்த வேகம், வீரதுங்காளையும்,
அவள் மாதர்களையும் கீழே தள்ளி விட்டது.
வீரதுங்கா பத்தினி, மேலே எழுந்து, குழிக்
குள் எட்டிப்பார்க்கும் போது, கொம்பன்
மேற்கு தலை வைத்து படுத்துக் கொண்டிருப்
பதை பார்த்து, வீரதுங்கா பத்தினி குழிக்குள்
இறங்கி, பன்றியின் அருகே மண்டியிட்டு
உட்கார்ந்து—) 234

235 ('கொம்பா! நீ என்ன நினைத்து இங்கு வந்து படுத்துக்
கொண்டாய்? நீ வந்த வயணத்தை, வாய் திறந்
து சொல்லுமப்பா!' என்றாள்.

கொம்பன்: 'அம்மணி, தாயே! நீ மேலே போ, நான் வந்து சொல்கிறேன்!' என்றதும், பத்தினி மேலே வந்தாள். கொம்பனும் மேலே வந்து நின்று, 'அம்மணி! இனி, நான் இங்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கமாட்டேன்!' என்று, கொம்பன் சொன்னதும்.

வீரதங்: 'கொம்பா! இங்கு, ஏன் இருக்கமாட்டாய்? உன்னை, யாராவது சண்டைப் பிடித்தார்களா?'

கொம்பன்: 'அம்மணி! என்னை, யாரும் சண்டைப்பிடிக்கவில்லை, நான், காராளன் தேசத்தை கண்ணில் பார்க்க வேண்டும், காராளன் தேசத்துக்கு, துரிதமுடன் செல்லவேண்டும். அம்மணி! அவன் செந்நெல் அழித்து, சிறுசம்பா போலேத்தி; மட்டை அழித்து, மறுசம்பா போலேத்தி, வரவேண்டுமென்றுதாயே!'

வீரதங்கா: 'அப்பா, கொம்பா!

பாட்டு:

"பன்றியின்னு காராளன் கண்டதானால்
படிவைத்து காராளன் முடிப்பானே
கொம்பனென்று கண்டதானால் காராளன்
குத்திநல்லோ சண்டாளன் கொல்வானே."

---

'கொம்பா, நான் சொல்வதைக் கேள், காராளன் தேசத்துக்கு நீ போகவேண்டாம்! காராளன், பன்றியைக் கண்ணில் கண்டால், குத்திவிடுவான்!

அப்பா, கொம்பா! உன்னை நான் கரும்பு போல் வளர்த்து, காராளனுக்கு பலியிடுவதா? போக வேண்டாமப்பா, கொம்பா! என்றதும்.

கொம்பன்: அம்மணி! நான், வரத்தால் பிறந்தவன்; எனக்கு, இப்போது வயது பதினாறு, வாலிபம் தொண்ணூறு சரியாக அடைந்து கொண்டிருக்கிறது, என், தாயார்! எனக்கு வரம் வாங்கும் போது, பொன்னருக்கு வலது; கொம்பும்! சங்கருக்கு இடது, கொம்பும்! ஏந்து கூடல் இருக்க, இடது குடிலசர்க்க வரம் வாங்கியிருக்கிறாள்; ஆகையால், இனி நான் போய், காராளனை ஒருகை பார்க்க வேண்டும்; இனி, நான் இங்கு இருக்க முடியாது! என்னை உடனே, அனுப்பிவையுங்கள் என்று -

பாட்டு

"நல்வாக்கு நீ கொடம்மா
நான் போயி வாரனம்மா
காராளன் தேசத்தையும்
கருவறுத்து வாரனம்மா
காராளன் தேசத்தையும்
சுருக்காக முடித்து வாரேன்."

---

வீரசூல: சரி, கொம்பா! நீ வந்து, கருகாளியம்மனிடம் சொல்லி விட்டுப்போ! என்றாள்.

கொம்பன், சரி நல்லது என்று, எல்லோரும் கரு
காளியம்மன் கோவிலுக்கு, சென்றார்கள்.
கொம்பன் கருகாளியம்மன் கோவில் வந்து,
235 236
கோவிலை, இடம்பரி, வலம்பரி சுற்றி வந்து,
கருகாளியம்மன் முன்நின்று, 'காளியாத்தா!
உன்னுடைய வரத்தால் பிறந்த எனக்கு,
வயது பதினாறு, வாலிபம் தோன்றி சரியாக
முடிகிறது! இனி, நான் காராளன் சீமையைப்
போய் கண்ணில் பார்க்க வேண்டும்! எனக்கு
போக விடை தாருங்கள், தாயே!' என்று பன்றி
காளியாத்தாளிடம் விடை பெற்று புறப்படும்
போது, வீரதுங்கா பத்தினி கொம்பனை நோக்
கி, 'நீ, போகும் போது, வீரமலையில் உன், தாயார்!
உன்னுடன் பிறந்த மற்ற ஆறு குட்டிகளுடன்
இருக்கின்றாள்; அவர்களைப் போய் பார்த்து
சொல்லிவிட்டு, அதன்பிறகு போ!' என்றாள்.

கொம்பன். 'சரி, அம்மணி! நான், போய் வருகிறேன்' என்று,
வீரதுங்கா பத்தினியிடம் விடை பெற்று,
வீரமலையை நோக்கிப் புறப்பட்டது,
கொம்பன்.

பாட்டு

"அழக்கொரு சாஸ்திரமாம் கொம்பன்
மூளத்துக்கொரு பஞ்சாங்கம்
நட்சத்திரம் பார்த்துக் கொண்டு
வருகுதடா என்சாமி கொம்பனது
வீரப்பூர் என்சாமி விட்டுமல்லோ
வருகுது பார் என்சாமி கொம்பனது.
நாகமலை என்னுத்தா தோகமலை
நடுவிருக்கும் என்சாமி வீரமலை
வீரமலை என்சாமி தேடியல்லோ
வெகு விரைவாய் கொம்பன் போகுதடா."

கொம்பன் வீரமலைக்கு வரும்போது, வீரமலையிலுள்ள மற்ற மிருகஜாதிகள் எல்லாம் கொம்பனைக் கண்டு பயந்து, நடுங்கியது. கொம்பனுடைய தாய்ப்பன்றி, கொம்பன் வருவதைக்கண்டு பயந்து, தன்னுடைய ஆறு குட்டிகளையும் கூட்டிக்கொண்டு போய், ஒரு புதரில் பதுங்கி மறைந்திருந்ததை; கொம்பன் பார்த்து தன்னுடைய தாய் என்று உணர்ந்து, புதரின் அருகில் சென்று அம்மா! ஏன், என்னைக்கண்டு பயந்து ஒளிந்து கொண்டீர்கள்? நான், உன்னுடைய மகன் தான்! என்ன, நீ, வீரதங்காபத்தினியிடம் விட்டு, 16 வருஷம் வளர்த்து வரும்படி சொல்லி விட்டு வந்தாயே, அம்மா! மறந்து, விட்டாயா?

~~கொம்பன்.~~ 'அம்மா! நீ எனக்கு வாங்கிய வரம், பதினாறு வருஷமும் சரியாக முடியப் போகிறது; ஆகையால், இனி, நான் காராளன் தேசத்தை போய் பார்த்து, அவனுடைய வெள்ளாமைகளை அழித்து, காராளனையும் கொன்று விட்டு, வர வேண்டும்! எனக்கு போக உத்தரவு கொடுங்கள், தாயே!' என்றது.

தாய் பன்றி. 'அப்பா, மகனே! காராளன், பன்றியை கண்ணில் கண்டால், குத்திக் கொன்று விடுவானே! என்ன, செய்வது?'

கொம்பன். 'அம்மா! காராளன் நாட்டை அழித்து, அவர்களையும், கொல்வதற்குத்தானே, என்னை வரமிருந்து பெற்றாய்? அம்மா!'

தாய் பன்றி. 'சரி, மகனே! அப்படியானால், நீ, இரவில் சென்று அவன் வெள்ளாமையை அழித்து, பகலில், நம் வீரப்பூர் எல்லையில் வந்து படுத்துக் கொள்ள வேண்டும்! அப்படியே, மூன்று நாளைக்குள் அவன் வெள்ளாமையை அழித்து விட்டு, அவனையும் கொன்று விட்டு, என்னிடம் வந்து, சேர வேண்டும்.'

கொம்பன். 'சரி, அம்மா! அப்படியே, வந்து சேருகிறேன்!' என்று தாயிடம் விடை பெற்றுக்கொண்டு

517.

கொம்பன், புறப்பட்டது.) 236

237 ( பாட்டு

"வீரமலை என்னாத்தா தாண்டியல்லோ
வருகுதே என்சாமி கொம்பனது
அடிக்கொரு கொம்பனுக்கு சாஸ்திரமாம்
மூளைக்கொரு என்சாமி பஞ்சாங்கம்
மதுக்கார என்னாத்தா வனம் தேடி
வருகுதே என்சாமி பன்றியது."

கொம்பன் மதுக்கார வனம் வந்து சேர்ந்தது. மதுக்கார வனம், வீரப்பூருக்கும், பொன்னி வளநாட்டுக்கும் எல்லையில் இருக்கிறது.

கொம்பன், இரவு தான், பொன்னிவள நாடு போக வேண்டுமென்று, ஒரு புதரில் படுத்துக் கொண்டது. அன்று பொழுது விழுந்து, இரவு பத்து நாழிகை நேரத்திற்கு, கொம்பன் காராளன் வெள்ளாமையை அழிக்க வேண்டு மென்று, எழுந்து புறப்பட்டது.

பாட்டு

"பொன்னிவள என்னாத்தா நாடு தேடி
வருகுதே என்சாமி கொம்பனது
ஆயிரமா என்சாமி நிலம் தேடி
வருகுதே என்சாமி பன்றியது."

கொம்பன், வெள்ளாங் குளத்தேரி, வெங்கலமதகடியில் வந்து நின்று, நல்ல

நிலா வெளிச்சத்தில் வடக்கு திரும்பி பார்க்கும் போது, ஆயிரமா நிலத்தில் செந்நெல் விளைந்து, கொலை கொலையாகத் தொங்கியது. கொம்பன் அதைப்பார்த்து, குருஞ்சிரிப்பு சிரித்துக் கொண்டே! அடடா! காராளனுக்கு இவ்வளவு வெள்ளாமை விளைந்தால், அவனுக்கு திமிர் இல்லாமல் இருக்குமா! என்று, கொம்பன் கோபத்துடன் வெள்ளாமையை அழிப்பதற்கு ஆயிரமா நிலத்தில் இறங்கியது.

பாட்டு

"துந்தத்தால் என்சாமி கட்டியது
காலாலே என்சாமி மிதிக்குது பார்.
அத்தனை என்னத்தா நெல்பயிரை
அரங்குசலு கொம்பன் செய்யுது பார்.
வேரோடு என்சாமி பிடுங்கியல்லோ
தாறு மாறு என்சாமி வீசுது பார்.
காலாலே என்சாமி மிதித்து மங்கே
நெல்லுகளை என்சாமி உதிர்த்துது பார்"

---

கொம்பன், ஆயிரமா நிலத்தில் உள்ள அவ்வளவு நெல்பயிரையும், வேரோடு பிடுங்கி, மண்ணில் நெல்குலையை வைத்து, வேரை மேலே வைத்து, நட்டு விட்டு, செய்யாத அல்லங்கோலம் செய்து விட்டு. கொம்பன், மறுபடி, வெங்களமதகின் மேல் போய் நின்று, பெரிய வாய்க்காலின்

கதவைப் பார்த்து —

பாட்டு

கோபம் கொம்பனுக்கு வருகுதுபார்
ஆங்காரமுள்ள கொம்பனுக்கு
அவ்வரளி என் சாமி கண்களிரண்டும்
செவ்வரளி என் சாமி ஆகுதுபார்.

---

கொம்பனுக்கு சரியான கோபம் வந்து, வெங்கல மதகின் கதவை தந்தத்தால் தட்டும் போது, கதவு உடைந்து தண்ணீர் பெருவெள்ளங் கொண்டு போய், ஆயிர மாநிலத்தில் பாய்ந்து, சமுத்திரம் போல் ஒரே சமமாக நின்றது.

தண்ணீர் மேல் சம்பா, நிலமோதி நின்றதை, நீர் மேல் சம்பா நிலமோதி நிற்பதைக் கண்டு, கொம்பன் சந்தோசமாகி, நாளைக்கு, இரவு வந்து வண்டிரோங்களத்தை, அழிக்க வேண்டுமென்று புறப்பட்டு மதுக்காரவனம் சென்று, படுத்துக் கொண்டது.

மறுநாள் காலையில், பொன்னிவள நாட்டில், சாமியின் பருவகாரனாகிய தேவேந்திரக் 237
குடும்பன், என்பவன், அதிகாலையில் எழுந்து,
239 (வயலில் மடை ஏதாவது பிடுங்கிவிட்டதா

என்னமோ போய் பாத்து வரலாமென்று,
மண் வெட்டியை எடுத்து தோளில் வைத்து,
ஆயிரமாநிலத்துக்கு புறப்பட்டான்.

பாட்டு

"ஓட்டம் என்சாமி வெகு நடையா
ஒரு விரைவாய் என்சாமி வாறானே.
ஆயிரமா என்சாமி நிலந்தேடி
அத்தினமே குடும்பன் வாறானே.
வெள்ளாங்குளத்தேரி குடும்பன்
வெங்கல மதகு வந்து நின்றான்."

குடும்பன் வெங்கல மதகு வந்து நின்று,
வடக்கு முகமாக பார்க்கும் போது, ஆயிர
மாநிலத்தில் சமுத்திரம் போல் தண்ணீர்
நிற்பதைக் கண்டு, குடும்பன் 'அய் யோ!' வென்
று, கீழே விழுந்தான்.

பாட்டு

குடும்பன். "அச்சமில்லா நாட்டுக்குத்தான்
இனி நாட்டுக்குத்தான்
இன்று அவகேடு அவகேடு
வந்திட்டுதே இனி வந்திட்டுதே
ஏங்கியில்லா என்சாமி நாட்டுக்குத்தான்
இனி நாட்டுக்குத்தான்.
ஏங்கி வந்து என்சாமி நேர்ந்திட்டுதே
இனி நேர்ந்திட்டுதே."